

JESUS GOOD SHEPHERD MINISTRIES
CHENNAI - 82

# இயேசுவே
# நல்ல மேய்ப்பன் ஊழியம்

## நம்பிக்கையின் வார்த்தை
## *Word of Hope*

## ஜனவரி 2017

**நிச்சயமாக முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது.**

- நீதி 23:18

ஆசிரியர்
R. கிங் டேவிட்



இவ்விடத்தில் இராஜா என்பவர் தேவனால் நியமிக்கப்பட்ட உலக அரசாங்கத்துக்குப் பிரதிநிதியாக சித்தரிக்கப்படுகிறார். தேவனுடைய கொள்கைகளை பின்பற்றும் அரசு அலுவலர்கள் நீதி வாழ்வை நம்மில் தூண்டுவார்கள். அரசாங்கத்தின் நீதியான கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படிய நமது கர்த்தர் விரும்புகிறார்.

துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்து அடங்கி-யிருக்கவும், சகலவிதமான நற்கிரியைகளையும் செய்ய ஆயத்தமாயிருக்கவும்
– தீத்து 3:1

நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர்நிமித்தம் கீழ்ப்படியுங்கள்.
1 பேதுரு 2:13

இவ்வுலகில் தீமை ஜெயிப்பதுபோலவும், பாவிகள் தண்டிக்கப்படாதிருப்பதாகவும் நாம் பல வேளைகளில் காண்கிறோம். ஆனால் துன்மார்க்கனின் கிரியைக்குத் தக்கதாகத்தான் தண்டனை கொடுக்கப்போவதாக தேவன் கூறுகின்றார்.

நீ அழாதபடிக்கு உன் சத்தத்தை அடக்கி, நீ கண்ணீர் விடாதபடிக்கு உன் கண்களைக் காத்துக்கொள். உன் கிரியைக்குப் பலனுண்டென்று கர்த்தர் சொல்லுகிறார்.

“உன் முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு” என் ஆத்மாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு.

இவ்வுலக வாழ்விற்கு தண்ணீர் மிகவும் அவசியமானது போல, தேவனும், அவரது சமுகமும் வாழ்க்கையின் திருப்திக்கும் முழுமைக்கும் மிகவும் அவசியமாயிருக்கின்றன. உண்மையான விசுவாசிகள் தேவனுக்காகவும், அவருடைய கிருபைக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் மற்றும் தங்களுடைய வாழ்கையில் தெய்வீக மிகுந்த கிரியைக்காகவும் பசியும் தாகமுமாயிருப்பார்கள்.

அவருடைய முகத்தை தேடும் ஆவலையும் விழுங்கிப் போடக்கூடிய இவ்வுலக கவலைகளையும் பூமிக்குரிய காரியங்களில் தொடர்ச்சியான ஈடுபாட்டையும், சிற்றின்பங்களையும் குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள், சிதறடிக்கப்பட்ட இஸ்ரவேலரின் எதிர்காலம் நம்பிக்கையற்றதாய் இருக்கவில்லை, அவர்கள் அனுபவித்த பாடுகளினால், இரண்டுமடங்கு ஆசீர்வாதத்தை அவர்களுக்குத் தந்து அவர்களை மீட்டு கொள்வதாக தேவன் வாக்களித்தார்.



**அவர்கள் பூர் என்னப்பட்ட சீட்டுபோட்டார்கள்:**

பூர் என்பது பகடையைப் போன்றது யூதர்களை அழிப்பதற்குரிய "நல்ல நாளை" தீர்மானிப்பதற்கு ஆமான் அதை பயன்படுத்தினான். சீட்டுப்போடப்பட்டதற்கும், அந்த திட்டம் நிறைவேற்றப்பட்டதற்கும் ஏறக்குறைய ஒரு வருடம் இடைவேளி இருந்தது; தேவனுடைய நடத்துவின்படி, ஆமானுடைய கொடிய சூழ்ச்சியை எதிர்த்துநிற்க மொர்தெகாய்க்கும் எஸ்தருக்கும் இது மோதிய அவகாசத்தை அளித்தது.

**நீ இந்த காலத்திலே மவுனமாயிருந்தாய்:**

இஸ்ரவேலரை விடுவிக்க எஸ்தரை உபயோகித்துக் கொள்ளுவது தேவனுடைய நோக்கமே என்றும் அந்த காரணத்திற்காகவே அவள் ராணியானாள் என்று மொர்தெகாய் விசுவாசித்தான். யூதரையெல்லாம் கூடிவரச்செய்து மூன்றுநாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம் பண்ணுங்கள் என்றாள்.

**பொல்லாத திட்டத்திற்கு ஒருமுடிவு ஏற்படுத்த:**

தேவனுடைய நீதியான குறுக்கீட்டின் விளைவாக ஆமான் தூக்கில்போடபட்டது அவன்



யூதர்மேல் தன் கையைப்போட எத்தனித்தபடியினால் அவனை மரத்திலே தூக்கிப்போட்டார்கள் யூதருக்குப் பயப்படும் பயம் அவர்களைப் பிடித்துக்கொண்டது தங்களை முழுவதுமாக அழித்துவிட விரும்பியவர்களை அவர்கள் எதிர்த்து நின்றனர்.

அந்நாளிலேதானே, யூதரானவர்கள் தங்கள் பகைஞரை மேற்கொள்ளும் படிக்கு "காரியம் மாறுதலாய் முடிந்தது"

அப்படியாக இந்த ஆண்டின் தேவனுடைய வார்த்தைகள் உங்களை நடத்துவதாவது நீங்கள் எதிர்பார்க்கும் முடிவை தர தேவன் விரும்புகிறார்.

**"நிச்சயமாகவே முடிவு உண்டு;**
**உன் நம்பிக்கை வீண்போகாது"**

உங்கள் யாவருக்கும்

**இனிய புத்தாண்டு வாழ்த்துகள்**

**"2017"**

உங்களுடைய குடும்பங்களுக்கு தேவகிருபையும்
சமாதானமும் உண்டாவதாக. ஆமன்.